| O.S.No. 340/2022 | PW2: திரு. ராஜகோபால்<br>த/பெ. திரு. பொன்னுசாமி | 23-01-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனக்கு 73 வயதாகின்றது. எனது பூர்வீகம் கன்னியம் நகர். எத்தனை வருடங்களாக நான் கன்னியம் நகரில் குடும்பம் இருந்தேன் என்றால் 40 வருடங்களாக குடும்பம் இருந்தேன். 1978 முதல் புதுத்தெருவில் வசிக்கிறேன். தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரனம் தெரியாது. வாதியின் தந்தை பெயர் கங்காதரன். கங்காதரனுக்கு வாதி மற்றும் 1-ம் பிரதிவாதி மகனும், 2, 3 பிரதிவாதிகள் மகளும் ஆவார்கள். கங்காதரனின் வீட்டு மனையில்தான் வாதி, பிரதிவாதிகள் குடும்பம் இருந்தார்கள். அந்த வீடானது கங்காதரன் பெயரில் கிரையம் உள்ளது. அதனை சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கினார்.

2. கங்காதரன் மேஸ்திரி வேலை செய்தார். கங்காதரன்தான் சம்பாதித்து வீடு கட்டி பிள்ளைகளை படிக்க வைத்தார். வாதிக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் ஒரே தேதியில் திருமணம் நடந்தது. வாதி கொஞ்ச நாள் கங்காதரனுடன் சண்டை போட்டு வெளியே போய்விட்டார். அதன்பிறகு 1 முதல் 3 பிரதிவாதிகள் கங்காதரனுடன் உடன் இருந்தார்கள். வாதியும், 1-ம் பிரதிவாதியும் சேர்ந்து 3-ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து வைத்தார்கள். 3-ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து வைக்க கங்காதரனுடன் வாதியும், 1ம் பிரதிவாதியும் ஒத்துழைக்க மறுத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு மறுத்ததால்தான் கங்காதரன் மனையினை 1-ம் பிரதிவாதியின் மனைவிக்கு விற்பனை செய்தார் என்று சொன்னால் அது எனக்கு தெரியவில்லை. அதனால், வாதி கங்காதரன் மீதும், 1-ம் பிரதிவாதி மீதும், 1-ம் பிரதிவாதியின் மனைவி பெயரிலும் சொத்து வழக்கு தாக்கல்

செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு கங்காதரனுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் அது எனக்கு தெரியாது.

3. கங்காதரன் உடல்நலக்குறைவால் இருந்தபோது 1 முதல் 3 பிரதிவாதிகள்தான் அவரை பாதுகாத்து பராமரித்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. நானும் சங்கரன் என்பவரும் பஞ்சாயத்து செய்தோம், வேறு எவரும் இல்லை. அவ்வகையில் இறந்த கங்காதரன் 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் அவர் வைத்திருந்த மனையை உயில் எழுதி வைத்தார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த உயிலின்படி தாவா சொத்தினை 1 முதல் 3 பிரதிவாதிள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

4. நான் பஞ்சாயத்து செய்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. கங்காதரனுக்கு ஒரே மனை, ஒரே வீடுதான் இருந்தது. வாதி வாடகை வீட்டில் குடியிருந்து பின்னர் தனியாக மனை வாங்கி வீடு கட்டி சென்றுவிட்டார். 1-ம் பிரதிவாதியை நான் அழைத்து பஞ்சாயத்து பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல, பஞ்சாயத்து பேசும்போது ஆவணங்களை பிரதிவாதிகள் எடுத்து சென்றுவிட்டார்கள். அது சம்மந்தமாக புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை.

5. A.S.No. 03/2015 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தினை கங்காதரன் 1993-ம் ஆண்டு கிரையம் பெற்ற அதனை அனுபவித்து வந்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பிரித்து கொடுத்துவிட்டார் என்றாலும், அதில் வாதி எவ்வித உரிமையும் கேட்கமுடியாது என்றாலும் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பஞ்சாயத்து செய்தோம். 2010-ம் ஆண்டு 1-ம்

பிரதிவாதியின் மனைவிக்கு கிரையம் கொடுத்த விஷயம் மற்றும் 2014-ல் உயில் சாசனம் எழுதிய விஷயம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.23 15:36:16 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**